அளவிற்கு உள்ள சுற்றுப்புறங்களிலும் வேறு ஆஸ்பத்திரி எதுவும் இல்லாத காரணத்தால், இந்தக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து, வருகின்ற ஆண்டிலாவது இந்த சுகாதார நிலையத்தை அமைத்துத் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அரசினுடைய வழிமுறைகளைப் பற்றி இந்த மன்றத்தில் பலமுறை நான் தெரிவித்திருக்கிறேன். ஒரு ஒன்றியத்தை ஒரு யூனிட்டாக எடுத்துக் கொண்டு, அதிலே எவ்வளவு மக்கள் தொகை இருக்கிறதோ, அதற்கேற்ப ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைப்பது என்பது மத்திய அரசின், மாநில அரசினுடைய கொள்கையாக வைக்கப்பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையிலே 30 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. அந்த வகையிலே இந்த ஒன்றியத்திலே 98,769 மக்கள் தொகை என்று கணக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஏற்கனவே 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கிற காரணத்தால், புதிதாக அமைக்கின்ற சாத்தியக்கூறுகள் இல்லை என்று நான் தெரிவித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6, திரு. எஸ்.எம். துரை, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

6—

திண்டுக்கல் நகரில் ஆட்டோக்களில் மீட்டர் பொருத்துதல்

*21810–**திரு. எஸ்.எம். துரை:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) திண்டுக்கல் நகரில் ஓடும் ஆட்டோக்களில் மீட்டர் பொருத்தப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் கணக்கில்கொண்டு, விரைவில் மீட்டர் பொருத்துவதற்கு உத்திரவிடப்படுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1995 மார்ச் 15]

(அ) திண்டுக்கல் நகரில் ஓடிக்கொண்டிருக்கும் ஆட்டோ ரிக்ஷாக்கள் அனைத்திலும் கட்டணக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

(ஆ) கட்டணக் கருவி பொருத்தப்பட்டதால் இவ்வினா எழாது.

திரு. எஸ்.எம். துரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்துறையிலும், முத்திரை பதித்து வரும் முத்தான முதல்வர், இதய தெய்வம், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய பதிலுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மீட்டர் பொருத்திய பிறகும், ஆங்காங்கு நடைபெறும் சில குறைபாடுகளையும், மீட்டரில் உள்ள சில தவறான முறைகேடுகளையும் போக்குவதற்கு 'ஃபிளையிங் ஸ்குவாட்' ஒன்று உருவாக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் அந்தப் பகுதியில்–திண்டுக்கல் மாவட்டத்தில்–ஓடிக் கொண்டிருக்கிற ஆட்டோக்களின் எண்ணிக்கை 532. அனைத்து ஆட்டோக்களிலும், அங்கே கட்டணக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில தவறுகள் ஏற்படுகின்றன என்று சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது. 1994–ஆம் ஆண்டு மட்டும் தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 65,988 முறைகள் சோதனை இடப்பட்டிருக்கின்றன. அதிலே அந்த ஆட்டோ ரிக்ஷாக்களுக்காக இணக்கக் கட்டணம் என்று அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டதன் வாயிலாக 3,52,800 ரூபாய் நம் அரசுக்கு வருவாய் ஈட்டப்பட்டிருக்கிறது. தவறுகள் எந்த இடத்திலே ஏற்பட்டாலும், அதை உடனடியாகக் கவனித்து அவர்களுக்கு பெனல்டி என்று போடப்பட்டிருக்கிறது. அதே போல ஏறத்தாழ நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலே 49,724 ஆட்டோக்கள் இருக்கின்றன. ஆகவே ஆட்டோக்களைப் பொறுத்தவரையிலே தவறுகள் எங்கே ஏற்பட்டாலும் அதை உடனடியாக சோதனை செய்து நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்டோக்களில் மீட்டர் பொருத்திக் கொண்டு போகிறார்கள். எவ்வளவுதான் நடவடிக்கையை அரசு எடுத்தாலும், அதில் முறைகேடுகள் நடக்கின்றன. போக்குவரத்து செலவையும் சேர்த்து வாங்கிக்கொள்கிறார்கள். அதைப் போக்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் மாறுவேடத்தில் சென்று சோதனை செய்வாரா? (சிரிப்பு) அது மட்டும் அல்லாமல் சீனாவில் ஆட்டோ, டாக்சி போன்றவைகளுக்கு பயணச் சீட்டிற்கு ரசீது கொடுக்கிறார்கள். அதேபோல ரசீது முறை தமிழகத்தில், ஆட்டோக்கள், டாக்சிகளுக்குக் கொண்டுவரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு உறுப்பினர் வேண்டுமென்றால் மாறு வேடத்தில் செல்லலாம். அமைச்சர் மாறு வேடத்தில் செல்லக்கூடாது என்று விதிமுறை இருக்கிறது. இருந்தாலும்கூட, பாதுகாப்போடு செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. பாதுகாவலர்கள்கூட வர வேண்டியிருக்கிறது. ஆகவே நாங்கள் மாறு வேடத்தில் செல்லக்கூடாது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாமரைக்கனி தற்செயலாகப் போனாலும் மாறுவேடம் போட்டாற் போலவே இருக்கிறது. (சிரிப்பு)

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: ஆகவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதைப் போல இது போன்ற தவறுகள் நடக்கக் கூடாது என்பதற்காகத்தான் 'ப்ரீ பெயிட் சிஸ்டம்' என்ற ஆட்டோ முறையை நாங்கள் கொண்டுவந்திருக்கிறோம். அதிலே குறிப்பிட்ட கட்டணத்தை நீங்கள் கம்ப்யூட்டர்களில் உடனடியாகப் பதிவு செய்து, நீங்கள் எந்தப் பகுதிக்குச் செல்கிறீர்களோ, அந்தப் பகுதிகளில் எல்லாம் விரைந்து செல்வதற்கு அதே இடத்திலே கட்டணத்தைக் கட்டியதற்குப் பிறகு தவறுகள் ஏற்பட்டாலும் உடனே நடவடிக்கைகள் மேற்கொள்கிறோம். அந்தப் பணிகளை மதுரை, சென்னை போன்ற நகரங்களில் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். படிப்படியாக அந்தத் தவறுகள் ஏதாவது ஓரிரு இடங்களில் நடைபெறுகிறது என்று சுட்டிக்காட்டினால், உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.எஸ். துரை முருகன்.

திரு. கே.எஸ். துரை முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் தமிழகத்திலே ஓடுகின்ற ஆட்டோக்கள்

1995 மார்ச் 15]

பெரும்பாலும் பெட்ரோல் என்ஜின் பொருத்தப்பட்டவை ஆகும். அதனாலே ரன்னிங் காஸ்ட் கொஞ்சம் அதிகமாகிறது. அதனால் கட்டணம் வசூலிப்பதிலே பிரச்சினை ஏற்படுகிறது. அதை மாற்றி பெட்ரோல் என்ஜினுக்குப் பதிலாக டீசல் என்ஜினை உருவாக்கினால் செலவு குறையும். அதனால் பொதுமக்கள், பயணிகளுக்கும் ஆட்டோ டிரைவர்களுக்கும் இடையே ஏற்படக் கூடிய தகராறுகள் குறையும்.

இதை அரசே பரிட்சார்த்தமாகச் செயல்படுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெட்ரோல் என்ஜின் பொருத்துவது என்பது டீசல் என்ஜின் பொருத்துவதைக் காட்டிலும் கூடுதலாக செலவாகிறது. ஆகவேதான் சில பேருக்கு பெட்ரோல் என்ஜினைப் பொருத்தமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எக்கானாமிக்-பொருளாதார அடிப்படையில் அவர்கள் தகுதிக்கு ஏற்ப டீசல், பெட்ரோல் ஆகிய இரண்டையும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த நிலை இருக்கிற காரணத்தால் அதை நாம் தவிர்க்கமுடியாத சூழ்நிலை இருக்கிறது. டீசல் விலையும் இப்போது கூடுதலாகியிருக்கிறது. சிலபேர் பெட்ரோல் என்ஜின் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பெட்ரோல் என்ஜின் அதிக விலையாக இருக்கிறது என்று சிலபேர் டீசல் என்ஜின் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே இதன்காரணமாக பல்வேறு குறைபாடுகள் ஆங்காங்கே இருந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துதான். ஆனால் அத்தனை ஆட்டோ உரிமையாளர்களும் அதை ஏற்றுக்கொள்வார்களா என்று எனக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெங்களூர் சிட்டி, திருவனந்தபுரம் சிட்டியிலே எல்லாம் எங்கே ஆட்டோவைக் கூப்பிட்டாலும் அவர்கள் வருவார்கள். ஆனால் நம்முடைய சென்னை மாநகரத்திலே ரயில்வே ஸ்டேஷனில் இறங்கி, எம்.எல்.ஏ. என்று சொன்னாலும்கூட, யாரும் வரமாட்டார்கள். இது ஒரு விதிவிலக்கு. மேலும் 15, 20 ரூபாய் கொடுத்தால்கூட, யாரும் வருவதற்குத் தயாராக இல்லை. அதை மாற்றுவதற்கு அமைச்சர் ஏதாவது நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காகத்தான் 'ப்ரீ பெயிட் சிஸ்டம்' என்று ஆட்டோ சிஸ்டத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். இப்போது சென்னையிலே இருக்கிற சென்ட்ரலில் கொண்டுவந்திருக்கிறோம். படிப்படியாக எல்லா பகுதிகளுக்கும் கொண்டு வருவதற்கு நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். அதற்காக ஆட்டோ உரிமையாளர்கள் முன்வர வேண்டும். அதுதான் இங்குள்ள சிக்கல். சில சிக்கல் இருக்கிறபோது நாங்கள் கடுமையான நடவடிக்கை எடுக்கிறபோது சில போராட்டங்கள் நடக்கிறபோது, சில கட்சிகளைச் சார்ந்தவர்கள் அந்தப் போராட்டத்தைத் தூண்டி விடுகிறார்கள். இதுபோன்று நாங்கள் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளமுடியாத சூழ்நிலை இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே நாங்கள் முடிந்த அளவிற்கு இந்த ஆட்டோக்களில் தவறுகளைச் சுட்டிக்காட்டுகிறபோது நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 7, திருமதி அ.தி. சரஸ்வதி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

7—

வன விளைப்பொருட்கள் திருடு போவதைக் தடுக்க நடவடிக்கை

25272—திருமதி அ.தி. சரஸ்வதி:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாளவாடி-கடம்பூர் மலைப்பகுதிகளில் நெல்லிக்காய், கடுக்காய், பூச்சங்காய் மற்றும் கல்பாசம், மரப்பாசம் போன்ற வன விளைப்பொருட்கள் களவு போவதைத் தடுக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழக சிறப்புக் காவல் படை, கர்நாடகா மாநில சிறப்பு அலுவல் காவல் படை, எல்லைப்பாதுகாப்பு படைப்பிரிவினரும் சந்தனக் கடத்தல் வீரப்பன் கூட்டத்தைப் பிடிக்கும் முயற்சியாக தீவிர